# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2309/04 - 2022 දෙසැම්බර් මස 05 වැනි සඳුදා - 2022.12.05

*2309/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு**

*1948 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் (திருத்தம்) மூலம் திருத்தப்பட்டவாறான 1934, பெப்புருவரி 05 ஆந் திகதிய ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 51 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**அறிவித்தல்**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான, ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 17 ஆம் பிரிவை முழுமையாக நீக்கி பின்வரும் பிரிவைப் பதிலீடு செய்வதன் மூலம் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு மேலும் திருத்தப்படுகின்றது.

17. "ஐம்பத்து ஐந்து வயது பூர்த்தியடைகின்ற போது அல்லது அதன் பின்னர் அரசாங்கத்தின் எந்தவொரு ஊழியரையும் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுவதற்கு பணிக்க முடியும். தகுதிவாய்ந்த அதிகாரியொருவரினால் சேவையில் வைத்திருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டாலன்றி அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு சட்டத்தின் மூலம் கட்டாயம் ஓய்வு பெறச் செய்யப்படும் காலம் குறிப்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தவிர, அனைத்து சிவில் அரசாங்க உத்தியோகத்தர்களும் அறுபது வயது பூர்த்தியடையும் போது கட்டாயம் சேவையிலிருந்து ஓய்வுபெறுதல் வேண்டும்."

இத்தீர்மானம் 2023, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் வலுவுக்கு வருகின்றது.

**தினேஷ் குணவர்தன,**
பிரதமர் மற்றும்
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2022, நவெம்பர் 30.

EOG 12-0063


1A - G 38256 — 08 (2022/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*